DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் புதன்கிழமை 25ம் நாள் சாட்சியாகிய குமரேஷ் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேஷ் | வயது | 34 |
| த/பெ. | ஆறுமுகம் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | டாடா ஏசி ஓட்டுநர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.90/2023**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள்வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

<u>**முதல் விசாரணை 25.06.2025 அ.சா.1**</u>

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். 26.12.2022ம் தேதி, மாலை 4.15 மணிக்கு எனது Hero Honda splender இருசக்கர வாகனத்தை அரக்கோணம் இரயில்வே நிலையம் முன்பு நிறுத்தி வைத்துவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது வாகனத்தை காணவில்லை. தேடிப்பார்த்து கிடைக்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்த புகார். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. ஒரு மாதம் கழித்து போலீசார் வாகனத்தை கண்டுபிடித்தார்கள். என்னிடம் பணம் இல்லை என்பதால் நான் வாகனத்தை பெற்று செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் என்னுடையதுதான். **(சி.பி. 228/2023ல் கண்ட இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**</u>

3. நான் 24 நாட்கள் கழித்துதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான்கு நாட்கள் கழித்து கொடுத்தேன். தேதி ஞாபகமில்லை. போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த தேதியில் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

4. எந்த போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் பதவி தெரியாது. எத்தனை நாட்கள் கழித்து வாகனம் கிடைத்ததாக போலீசார் சொன்னார்கள் என்றால் ஒரு மாதம் கழித்து போன் மூலம் சொன்னார்கள். எனது வாகனத்தை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. போலீசார் கைப்பற்றிய வாகனம் என்னுடையது இல்லை என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>**இல்லை

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.